Tamilmanam International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed monthly academic research journal
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
doi : https://doi.org/10.63300/tm12042026

Vol. 12 No. 04 (2026): September 2026, **p292-305** | Available online at: www.tamilmanam.in

Original Research Paper – Peer reviewed ✓

முதற்பதிப்பின் பின்புலத்தில் குறுந்தொகை மீதான மதிப்பீடுகள்

Evaluations of Kuruntokai in the Context of Its First Edition

சீ. அகல்யா,
முனைவர் பட்ட ஆய்வாளர்
அரிய கையெழுத்துச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 010.

C. Agalya*,
Ph.D. Research Scholar
Department of Rare Manuscripts
Tamil University, Thanjavur – 613 010.
Email: agalya083@gmail.com

Article history
Received: 20-08-2026
Revised: 30-08-2026
Accepted: **29-08-2026**
Published on: 10-09-2026

*Corresponding Author
Email:
agalya083@gmail.com

Abstract
V. O. Chidambaram Pillai, a freedom fighter who raised the pride of Tamils and a Tamil scholar, served the Tamil language across four domains: translation, creative writing, commentary, and publishing. He translated James Allen's book "Out from the Heart" into Tamil under the title "Agame Puram" (Chidambaram Pillai). Centered on the idea that the inner mind and outer world are not different, and that if the inner self becomes pure, the outer life will also become refined, this article analyzes the publishing history of this work alongside its views on morality, virtue, and mindset using comparative and descriptive critical methods. Furthermore, this paper highlights how historical details about the book risk being lost due to the removal of prefaces in subsequent editions.

Keywords: *Agame Puram, Morality, High-Quality Life, Mindset, Actions, Thoughts.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

சுருக்கம்

எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவதாக விளங்கும் குறுந்தொகை, “நல்ல குறுந்தொகை” எனும் அடைமொழியால் சிறப்பிக்கப்படும் நூலாகும். சுவடி வடிவில் மட்டுமே கிடைந்துவந்த குறுந்தொகையை, திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கனார் 1915 ஆம் ஆண்டு முதன்முதலாக அச்சுவடிவில் பதிப்பித்து வெளியிட்டார். சங்க இலக்கியங்களுள் 1887 முதல் பதிப்பிக்கத் தொடங்கிய நிலையில், குறுந்தொகை ஏழாவதாக 1915 இல் பதிப்புப் பெறுகிறது. இக்கட்டுரை, குறுந்தொகையின் முதற்பதிப்பான இப்பதிப்பு உருவான பின்புலத்தையும், பதிப்பாசிரியர் மேற்கொண்ட சுவடித் தேடல், திருத்தங்கள், உரை வரையறை போன்ற முயற்சிகளையும், அப்பதிப்பு பெற்ற சமகால மதிப்பீடுகளையும் ஆய்வுக்கு உட்படுத்துகிறது.

திறவுச்சொற்கள்

குறுந்தொகை; முதற்பதிப்பு; சௌரிப் பெருமாளரங்கனார்; சங்க இலக்கியம்; பதிப்பியல் வரலாறு

அறிமுகம்

குறுந்தொகை, எட்டுத்தொகை வரிசையில் இரண்டாவதாக இடம்பெறுகிறது. நல்ல குறுந்தொகை என்ற அடைமொழியில் இதன் சிறப்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன. உரையாசிரியர்களால் எடுத்துரைக்கப்பட்ட மேற்கோள் பாடல்களில் குறுந்தொகைப் பாடல்களே மிகுதியாக இடம்பெற்றுள்ளன. இவ்வாறான சிறப்புகளுக்கு உரிய குறுந்தொகைப் பாடல்கள் சுவடிகளாக இருந்து வந்த நிலையில், அச்சுவடியை அச்சுவாகம் ஏற்றி முதற் பதிப்பை வெளியிட்டவர் திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கனார் (அரங்கன், 1915). இம்முதற்பதிப்பு 1915 இல் வெளிவந்துள்ளது. இப்பதிப்பிற்கு முன்பாக, 1887 முதலாகச் சங்க இலக்கியங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன (சுந்தரமதி, 1984). எனினும் 1915 இல்தான் குறுந்தொகை முதலாவதாகப் பதிப்பிக்கப்படுகிறது. இந்நிலையில் குறுந்தொகை முதற்பதிப்பின் பின்புலத்தில் அதற்கான மதிப்பீடுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

1. சங்க இலக்கிய முதற்பதிப்புகளும் குறுந்தொகையின் முதற்பதிப்பும்

சங்க இலக்கியத்துள் முதன்முதலாகப் பதிப்புப் பெற்ற நூலாக கலித்தொகை அமைகிறது. முதற்பதிப்புகளின் இறுதியாக அகநானூறு அமைகிறது. இவற்றுள் கலித்தொகை, பத்துப்பாட்டு,

புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை எனும் நூல்களுக்கான முதற்பதிப்புகளை அடுத்து, குறுந்தொகைக்கான முதற்பதிப்பு வெளிவந்துள்ளது. குறுந்தொகைக்கு அடுத்தபடியாகப் பதிப்பிக்கப்பட்ட நூலாக, பரிபாடலும் அகநானூறும் இடம்பெறுகின்றன. இதன் பதிப்பு வரிசையைக் கீழ்வருமாறு அட்டவணை செய்யலாம் (படம் 1).

சங்க இலக்கியம்	முதற்பதிப்பு ஆண்டு	பதிப்பித்தவர்
கலித்தொகை	1887	சி.வை.தாமோதரம் பிள்ளை
பத்துப்பாட்டு	1889	உ.வே.சாமிநாதையர்
புறநானூறு	1894	உ.வே.சாமிநாதையர்
ஐங்குறுநூறு	1903	உ.வே.சாமிநாதையர்
பதிற்றுப்பத்து	1904	உ.வே.சாமிநாதையர்
நற்றிணை	1914	பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர்
குறுந்தொகை	1915	சௌ. அரங்கனார்
பரிபாடல்	1918	உ.வே.சாமிநாதையர்
அகநானூறு	1920	இராசகோபால அய்யங்கார்

படம் 1: சங்க இலக்கிய நூல்களின் முதற்பதிப்பு வரிசை (1887–1920)

இதனடிப்படையில் சங்க இலக்கியங்கள் அனைத்தும் 1887 முதலாகத் தொடங்கி 1920 ஆம் ஆண்டுக்குள்ளாக, முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டுவிட்டன என்பதை அறியமுடிகிறது. இதனைத் தொடர்ந்த பதிப்புகள் மறுபதிப்புகள் அல்லது இரண்டாம் முதலாகிய பதிப்புகளாகும் (சுந்தரமதி, 1984).

2. குறுந்தொகை முதற் பதிப்பு (1915)

எட்டுத்தொகையுள் இரண்டாவதாகிய குறுந்தொகை மூலமும் திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன் இயற்றிய புத்துரையும், இவை உரையாசிரியரால் சோழவந்தான் கிண்ணிமடம் ஸ்ரீ-லஸ்ரீ சிவப்பிரகாச ஸ்வாமிகள் ஆதரித்து அருந்தமிழ் அறிவுறுத்திய ஆருதவிக்காக அவ்வடிகளுக்கு அகங்கனிந்து உரிமையாக, வேலூர் வித்யாரத்நாகர

அச்சுக் கூடத்திற் பதிப்பித்து வெளியிடப்பட்டன” என்ற முகப்புப் பக்கச் செய்தியின் வழியாக குறுந்தொகையின் முதற்பதிப்பு திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன் அவர்களது புத்துரையுடன் 1915 (25.08.1915) இல் வெளிவந்த பதிப்பு என்பதை அறிந்துகொள்ள முடிகிறது (அரங்கன், 1915: முகப்பு).

இப்பதிப்பில், முதலில் இடம்பெற்றுள்ள குறிப்பு, “மாணவர்கள் தம் ஆசிரியரிடத்திலிருந்து தகவுரையோடு கையெழுத்து வாங்கி எமக்கு அனுப்புவார்களாயின், அவர்கட்கு இரண்டு ரூபா விலையுள்ள குறுந்தொகை மூலமும் உரையும் ஒன்றரை (1-8-0) ரூபாவிற்கு அனுப்பப்படும். ஒரு மாணவர் ஒரு புத்தகத்திற்குத்தான் எழுதிப்பெற்றுக்கொள்ளலாம் (தபாற் கூலி வேறு)” என்ற குறிப்பின் வழியாக இப்பதிப்பு குறுந்தொகை வாசிப்பை மாணவர்களுக்கும் ஊக்கப்படுத்தி குறுந்தொகையைப் பரவலாக்கும் நோக்குடனும் வெளியிடப்பட்டுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது (அரங்கன், 1915).

இப்பதிப்பில் உரிமையுரை, சிறப்புப் பாயிரம், முகவுரை, உதவியுரைத்தல், குறுந்தொகைக்கு உறுந்துணையாக அருந்தொகை உதவிய பெருந்தகைச் செல்வர்கள் பெயரும் உதவிய தொகையும், மேற்கோளாட்சி விளக்கம், அருங்குறிப்புகளும் பிறவும், எஞ்சியவைகளும் பிறவும், பாடினார் பெயரும் பிறவும், குறுந்தொகை மூலமும் உரையும், அரும்பத அகராதி, செய்யுள் முதற்குறிப்பகராதி, பிழையுந் திருத்தமும், (விளம்பரம்) எனும் பகுதிகள் அடங்கியுள்ளன (படம் 2).

எண்	பகுதியின் பெயர்
1	உரிமையுரை
2	சிறப்புப் பாயிரம்
3	முகவுரை
4	உதவியுரைத்தல்
5	அருந்தொகைக்கு உதவிய பெருந்தகைச் செல்வர்கள் பெயரும் தொகையும்
6	மேற்கோளாட்சி விளக்கம்
7	அருங்குறிப்புகளும் பிறவும்
8	எஞ்சியவைகளும் பிறவும்
9	பாடினார் பெயரும் பிறவும்

10	குறுந்தொகை மூலமும் உரையும்
11	அரும்பத அகராதி
12	செய்யுள் முதற்குறிப்பகராதி
13	பிழையுந் திருத்தமும்
14	விளம்பரம்

படம் 2: குறுந்தொகை முதற்பதிப்பு (1915) – உள்ளடக்கப் பகுதிகள்

3. சிறப்புப் பாயிரத்தில் குறுந்தொகை

இப்பதிப்பின் தொடக்கத்தில், "வேலூர் ஊர்ஹீஸ்காலெஜ் தலைமைத் தமிழப் பண்டிதராகிய ஸ்ரீமான் பு.க. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி திருவாய் மலர்ந்தருளிய சிறப்புப் பாயிரம்" நேரிசை யாசிரியப்பாவில் இடம்பெறுகிறது. இச்சிறப்புப் பாயிரத்தின் வழியாக குறுந்தொகை குறித்த அன்றைய காலச் சூழலையும் குறுந்தொகைக்கான இப்பதிப்பின் சிறப்பையும் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது (அரங்கன், 1915: சிறப்புப் பாயிரம்).

குறுந்தொகையைச் சிறப்பித்து உரைக்குமிடத்து, "பேசரும் புலமை வாய்ந்த வான்றோர் மனமகிழ்ந்து ஏத்த வாய்ந்தருள் பாக்கள் அமைந்த குறுந்தொகை" எனச் சிறப்பிக்கின்றது. இக்குறுந்தொகை இப்பதிப்பிற்கு முன்பு ஒருவராலும் பதிப்பிக்கப்படாத இருந்த நிலையை இச்சிறப்புப் பாயிரம், "ஒருவரும் அச்சிற் பதியா நூலைப் பலரும் பொருளை மதியால் தேரினும் மயங்கி ஐயுற்றே அறியாப் பனுவலை அச்சிடினம் மது அறியாத் தன்மை அவிர்ந்திடுங் கொல்லென அச்சுற்று" என்பதால் அறியமுடிகிறது (அரங்கன், 1915: சிறப்புப் பாயிரம்).

இப்பதிப்பு நல்லுலகத்தவர் போற்றும்படியாகப் பதிப்பித்த பதிப்பாசிரியர் குறித்துக் குறிப்பிடும் இச்சிறப்புப் பாயிரம் "கமழ்சீர் நல்லுலகத்தவர் மெச்ச அச்சிற் பதித்தனன் அழகிய வயலிலும் மச்சு மாளிகையிலும் மலிசீர் அன்னம் ஓங்கிய சோணாட்டு உயர் திருக்கணபுரம் பாங்கிற் செய்த பன்னிய தவத்தின் பயனென வந்தோன் பலவாஞ் சங்கத்து இயனெறி நூல்களை இனிதாய் மதுரை நான்காஞ் சங்க நடைபெறுவதனில் வான்பொற் பதக்கம் வரிசையிற் பெற்றோன், திண்ணிய மனத்தாற் செய்யும் யோகம் நண்ணியோன் பாச்செய் நா வல்லோனே, தோமின் நல் வினையாற் சௌரிப் பெருமாள் தாமுறு நற்குணந் தழைந்த புதல்வன் பாடிய லுதாரன் பன்னிய வாணியம் பாடியிற் கல்விப் பயனார் சாலையிற் தண்டமிழ்ப் புலமை தாங்கி நடாத்தல் கொண்டவன் நூல்களைக் கோதற ஆய்தல் செய்யும் அறிஞன் செந்நட்பினுக்குச் செய்ய வணிகலம் சீரார்

அரங்கசாமி ஐயங்கார் தயங்கு நேமியங் கடவுளை நினைக்கும் புனிதனே" என்றுரைக்கிறது (அரங்கன், 1915: சிறப்புப் பாயிரம்).

இவற்றால், குறுந்தொகை முதற்பதிப்பான இப்பதிப்பிற்கு முன்பு குறுந்தொகைப் பதிப்புகள் எவையும் வரவில்லை என்பதை உறுதிபடுத்துவதுடன், குறுந்தொகை பதிப்பாக வெளிவர வேண்டும் என்பதைத் தமிழ்ச் சமூகம் விரும்பியுள்ளது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

3.1. முகவுரையில் குறுந்தொகை

"மதுரைத் தமிழ்ச் சங்கத்து அங்கத்தினர்களில் ஒருவராகிய மணக்கால் அய்யம்பேட்டை (செந்தமிழ் விலாஸம்) ஸ்ரீமான் S. முத்துரத்ந முதலியார் அவர்கள் எழுதிய முகவுரை" இடம்பெறுகிறது. இதன்வழியாகக் குறுந்தொகை குறித்தான அன்றைய கருத்துகளை அறிந்துகொள்ள முடிகிறது (அரங்கன், 1915: முகவுரை).

குறுந்தொகையின் சிறப்புரைக்கும் இம்முகவுரை, "குறுந்தொகை என்பது, அமிழ்தினும் இனிய நந்தமிழ் மொழி மாட்டுச் சங்க மருவிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்பான் சுவையும் ஒருங்கே ஒழுகப் பத்தழகும் பரந்து நிற்கக் கழி பெருஞ்சிறப்புடைத்தாயதோர் நூலாம்" என்றும், எட்டுத்தொகையை எடுத்துரைக்கும் வெண்பா, நல்ல குறுந்தொகை எனக் குறிப்பிடுவதால், "வெண்பாவில் நல்ல என்ற அடைமொழியால் குறுந்தொகையைக் கூறிப் போதலானே இந்நூலின் பெருமை நன்கு விளங்கும்" என்றும் "அகத்தின் பகுதியையே எடுத்துரைக்கும் இந்நூலின்கண் அமைந்த உள்ளுறை, இறைச்சி முதலிய பகுதிகள் மிக்க அழகாகக் காணப்படுகின்றன. சொன்னயம் பொருணயங்களிலும் அத்தன்மைத்தே" என்றும் "ஒவ்வோர் செய்யுளும் கற்பனைக் களஞ்சியமாகவே விளங்குகின்றது" என்றும் "இந்நூலில் சில சரித்திரக் குறிப்புக்களும், தமிழ் நாட்டுப் பழைய வழக்க ஒழுக்கங்களும் அரும்பதங்களும் பழந்தமிழ் நூற் பிரயோகங்களும் மலிந்து காணக் கிடக்கின்றன" என்றும் "பிற தொகை நூல்களினும் இந்நூலின்கண் பெண்பாலார் அருளிச் செயலாகிய பாடல்கள் மிக்குக் காணப்படுகின்றன. அவற்றால் இந்நூல் இக்காலத்துப் பெண்கல்வி இன்றியமையாததாமெனக் கருதும் நவீனர்கட்குப் பண்டைத் தண்டமிழ் நாகரிகம் இனைத்தெனக் காட்டாநிற்கும்" என்றும் உரைக்கிறது (அரங்கன், 1915: முகவுரை). இவற்றால், பெண் கல்வி குறித்துப் பேசும் இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த நவீனர்களுக்குப் பண்டைக் காலத்தே தமிழில் பெண்களுக்கும் பெண் கல்விக்கும் சிறப்பளித்த நூலாகக் குறுந்தொகை இருப்பதை, இப்பதிப்பின் வழியாக வெளிப்படுத்த முடியும் என்பதை இந்த முகவுரை எடுத்துரைப்பது விளங்கும்.

சங்க இலக்கியங்களின் தோற்றங்களுக்குப் பிறகு ஏற்பட்ட சமய எழுச்சி, சமயப் பூசல்களை அடுத்து, சங்க இலக்கியங்கள் பதிப்பிக்கப்படும் பொழுது, அப்பதிப்பிற்கும் சமயங்களுக்குமான தொடர்பு

குறித்த செய்தி அவசியமாகக் கருதப்பட்டுள்ளது. இதனை உணர்ந்து அதற்கான நெறிகளை எடுத்துரைக்கும் இம்முகவுரை, "தொடக்கத்தில் குமாரக்கடவுள் வணக்கமும் அடுத்து இறைவன் அருளிய கொங்குதேர் வாழ்க்கை என்னும் திருமுகப் பாசுரமும் அமைந்திருத்தலால் சைவர்களாலும் திருவாய்மொழி, திருவிருத்தம் முதலியவைகளின் வ்யாக்யாநங்களிலே ஊருண்கேணி இன்னோரன்ன சில பல செய்யுட்கள் எடுத்தாளப்படுதலால் வைணவர்களாலும் இந்நூல் பெரிதும் பாராட்டப் பெறுவதாகும்" என்றுரைக்கிறார் (அரங்கன், 1915: முகவுரை). இம்முகவுரையின் கருத்து, குறுந்தொகைப் பதிப்பை, அக்காலத்தைய சமூகச் சூழலுக்கு ஏற்ப அமைத்துக் கூறுவதாக அமைகிறது.

3.2. உரைகளின் தேடுதல் முயற்சி

குறுந்தொகைக்கு, நச்சினார்க்கினியரும், பேராசிரியரும் உரையெழுதியுள்ளனர் என்பதை அறிந்துகொண்ட தமிழ்ச் சமுதாயம் அந்த உரைகளைத் தேடியுள்ளன. ஆனால் அந்த உரைகள் கிடைக்கப்பெறவில்லை. அந்நிலையில், குறுந்தொகைப் பாக்களை, புத்துரை எழுதிப் பதிப்பிக்கும் முயற்சியை மேற்கொண்டனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

இப்பதிப்பிற்கான முயற்சியைப் பாராட்டிக் கூறும் முகவுரைப் பகுதியானது, "இவ்வருமந்த நூல் வெளியிடுவதன் பொருட்டு எடுத்துக்கொண்ட முயற்சிக்கும் காலத்திற்கும் அளவில்லை. மிகுந்த பொருட் செலவினால் இத்தொகை நூல் வெளிவந்திருக்கின்றது" என்றுரைக்கிறது (அரங்கன், 1915: முகவுரை).

4. குறுந்தொகைப் பதிப்பில் அகநானூறு, பரிபாடல் பதிப்பு முயற்சி

1915 இல் முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்ட குறுந்தொகைப் பதிப்பில் இடம்பெறும் குறிப்பொன்று, "N.B. இன்னும் அச்சிற் றோற்றாத அகநானூறு, பரிபாடல் இரண்டும் வெளிவருமாயின் சொட்டுஞ் சுவையுடைய எட்டுத்தொகை நிறைவு பெற்று விளங்கா நிற்கும். இக்கூறிய இரண்டனுள் பரிபாடலை யான் வெளியிடும் நோக்கத்துடன் ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன்" என்ற குறிப்பால் இதன் பதிப்பு முயற்சியை அறிந்துகொள்ள முடிகிறது (அரங்கன், 1915).

5. குறுந்தொகையின் தேடுதலுக்கு அடிப்படையாக அமைந்த தொல்காப்பியம்

குறுந்தொகைப் பாடல்களைத் தேடித் தொகுத்து உரையெழுதி வெளியிட வேண்டும் என்ற எண்ணம் சௌரிப்பெருமாள் அரங்கனார் அவர்களுக்குத் தோன்றுவதற்கு அடிப்படையாக

அமைந்த நூல் தொல்காப்பியம் பொருள் அதிகாரம் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இடையில் கண்டு வாசித்த குறுந்தொகைப் பாக்களின் இனிமை, அந்நூல் முழுமையைத் தேடுவதற்கு அடிப்படையாக அமைகிறது. இதனை, "யான் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை மீண்டும் சிலமுறை படிக்கக் கருதி, அங்ஙனமே படித்துவந்த காலத்தில், அதனகத்து வந்துள்ள தொகைநூற் செய்யுட்களைக் கண்டு அவற்றின் சுவையிடத்து ஈடுபட்டு உள்ளத்தைப் பறிகொடுத்திட்டேன். அவற்றுள் வெளிவாராத நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலியவற்றுள், இது குறுந்தொகையெனக் குறிக்கப்பட்ட சில செய்யுட்கள் பெயருக்கேற்பச் சிறியவாய்க் காணப்பட்டமையானும், பிறநூல்களிற் கண்டதிலிருந்து அந்நூல் முழுவதுங் கிடைக்கலாமென்ற துணிவுண்டானமையானும், அதனைத் தேடி என் சிற்றறிவிற்கு எட்டியவரையில் உரைசெய்து வெளிப்படுத்தின், குற்றங்களைந்து கொள்வார் குணமுடையாரென்று கருதி அந்நூலைத் தேடும் அவாமிக்கவனானேன்" என்பதால் அறிந்துகொள்ள முடிகிறது (அரங்கன், 1915: உதவியுரை).

குறுந்தொகையின் பிரதிகளை ஸ்ரீமான் எஸ். முத்துரத்ந முதலியார் அவர்களை வினவிய பொழுது, அப்பிரதி சென்னையில் இருப்பதாக அறிந்து சென்னை சென்று தேடுகிறார் சௌரிப்பெருமாள் அரங்கனார். அந்நிலையில் கிடைத்த சுவடியைப் பிரதி செய்வதற்கு வி. முத்துசுவாமி ஐயர் உதவியுள்ளார். எனினும் அந்தப் பிரதி பிழை மலிந்தும் குறைப்பிரதியாகவும் இருந்துள்ளது. எனினும் அவற்றுள் முதல் 100 பாடல்களை எழுதியும் சுவடியில் ஒரு பாடல் முழுமையும் இல்லாமல் இருப்பதுடன் பிழையுடன் இருப்பதையும் குறிப்பிட்டு, ஸ்ரீமான் எஸ். முத்துரத்ந முதலியார் அவர்களுக்கு எழுதிய பொழுது, முதலியார் அவர்கள் ஒரு பிரதியை அரிதின் முயன்று, தொகுத்து அளித்துள்ளார்கள். அவ்வாறு பெற்ற சுவடி இல்லையானால், இக்குறுந்தொகைப் பதிப்பு அமைந்திருக்காது என்பதைப் பதிப்பாசிரியர் குறிப்பிடுகிறார் (அரங்கன், 1915: உதவியுரை).

6. கிடைக்காத பாடலுக்கான முயற்சி

இப்பதிப்பிற்காக கிடைத்த பிரதியில் குறுந்தொகையில் ஒரு பாடல் இல்லாமல் இருப்பதைக் கண்டறிந்து அப்பாடலையும் பெறுவதற்காகச் சுவடி தேடிய முயற்சிகளைக் காணமுடிகிறது. இந்த முயற்சியின் ஊக்கத்தையும் அதனால் கிடைத்த பலனையும் இப்பதிப்பாசிரியர், "அகப்படாத ஒருபாட்டையும் கண்டுபிடித்தலிற் கருத்தூன்றி அங்ஙனம் அகப்படாதது 300வது செய்யுளின் மேலிருப்பதாக உணர்ந்துகொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்து சங்கத் தலைவராணை பெற்றுச் சங்கத்து ஏட்டுப் பிரதியோடு என் பிரதியை யான் ஒருவனாகவே ஒப்புநோக்கிக் காணப்பட்ட பாடபேதங்களையும் குறித்துக்கொண்டு வருங்காலை, 316வது செய்யுளாக,

'ஆய்வளை ஞெகிழவும்' என்னும் செய்யுள் அகப்பட்டது. அதனால், கருந்தனம் பெற்றார் போல மகிழ்ச்சி மிக்கவனானேன். ஆகவே, கடவுள் வாழ்த்துடன் 402 செய்யுட்கள் என்று கதிய கணக்கு நேராயிற்று. மீண்டும் கோடை விடுமுறையில் மீதமாக நாட்களிருந்தமையின், பழந்தமிழ்ப் புலவர்கள் வீட்டில் சீரிய பிரதி இருக்குமெனக் கருதி மிதுலைப்பட்டி செவ்வூர் முதலிய இடங்களுக்குச் சென்று தேடினேன். தங்கள்பால் பிரதிகளை நாடி வருவார் திறத்துத் தாம் வழக்கமாகச் செய்வதே போல, என்னை மறைத்திடக் கூடிய அத்துணை ஏடுகளை எடுத்து என் முன்னர்ப் போகட்டுவிட்டுத் தாங்கள் விரும்பும் ஏடுகள் கிடைப்பின் எடுத்துக்கொள்கவென்று தந்தொழின் மேற் செல்வாராயினார். அவற்றுள் பெரும்பாலன அச்சிடபட்டனவே. சங்கத்து நூல்களாக அச்சேறா நூல்கள் எவையும் அகப்பட்டில. அப்பீடுடையார் மரபிற் றோன்றிய ஏடுடையார் கூறியவற்றைக் கொண்டே, மற்றும் பழந்தமிழ்ப் புலவர்கள் வீட்டிலும் தேடுதலில் அவாவற்று மீண்டேன்" என்றுரைக்கின்றார் (அரங்கன், 1915: உதவியுரை).

7. மூலப்பதிப்பினும் உரையுடன் கூடிய பதிப்பு சிறப்பாக அமைதல்

மூலம் மட்டும் பதிப்பித்து வெளியிடுவதினும், அவற்றை உரையுடன் பதிப்பித்தலே சிறப்பென்றும், அப்பதிப்பே பயன் நல்குவன என்ற எண்ணமும் குறுந்தொகை முதற் பதிப்பாசிரியரிடம் இருப்பதை, "மூலமளவிற் பதிப்பித்தல் சிறிதும் பயன்தராததாகும். பொருளெழுதியே பதிப்பித்திடுக, முயன்றால் முடியாததென்று இன்னோரன்ன அன்பர்களின் வற்புத்துக்களும் என்னை வலியுள்ளேனாக மயங்கச் செய்து ஊக்கங் கொள்ளச் செய்திட்டன. ஆதலின் அவாவின் பெருக்கிலாழ்ந்து அதனிடைப்பட்டு முற்றும் உரையெழுதி இற்றைக்கு மூவாண்டின் முன்னர் முடித்தேன்" என்பதனால் அறியமுடிகிறது (அரங்கன், 1915: உதவியுரை). இதனால், அக்காலத்தில் சங்க இலக்கியங்கள் உரையுடன் எதிர்நோக்கப்பட்ட வரலாற்றை அறிந்துகொள்ள முடிகிறது.

8. மேற்கோளாட்சியின் சுருங்கிய வடிவம்

குறுந்தொகை எடுத்தாளப்பட்ட இடங்களை சௌரிப் பெருமாள் அரங்கன் விரிவாக எழுதிவந்துள்ளார். இந்நிலையில் அக்குறிப்புகளை மேற்கோளாட்சி விளக்கம் என்ற பகுதியாக வெளியிடுவதற்கு முயன்ற பொழுது, அவை மிகவும் விரிந்திருந்த காரணத்தால் அவற்றைச் சுருக்கி வெளியிட்டுள்ளார் என்பதை, "தொல்காப்பியப் பொருளதிகாரத்து இத்தொகை நூற் செய்யுட்களில் முழுச்செய்யுட்களாக பல செய்யுட்கள் மேற்கோளாக எடுத்தாளப்பட்டிருந்தன. இறையனார் அகப்பொருளிடத்தும் அங்ஙனமே ஆளப்பட்டிருந்தன. தொல்காப்பியப் பொருளதிகாரத்திற் சிலவற்றிற்கு உரையும் வரையப்பட்டிருந்தன. மற்றும் தொல்காப்பியம் – நச் – எழுத்து, சொல்,

பொருள்; இளம் – எழுத்து, சொல்; சேனா – சொல் இவற்றினும், பத்துப்பாட்டு, புறநானூறு, திருக்குறள், சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்கோவையார், யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக் காரிகை, இலக்கண விளக்கம், நன்னூல், சின்னூல் முதலிய பன்னூல்களிலும் மேற்கோளாக இந்நூல் எடுத்தாளப்பட்டிருந்தமையால் அவையெல்லாம் இவ்வுரைவரைதற்கு உற்ற துணையாக உதவுவனவாயின. அவையெல்லாவற்றையும் உணரலாம்படி வரைந்து வைத்திருந்த மேற்கோளாட்சி விளக்கம் மிக்க விரிவினதாகிவிட்டமையின், பதிப்பிக்க இயலாது போயிற்று; என்றாலும் பெரும்பயன்படுவனவும், ஆராய்ச்சிக்கு இன்றியமையாதனவாய் இருந்தனவுமான தொல் – பொருள்; இறை – அகம் இவை முழுவதும், கலித்தொகை, புறநானூறு, திருக்குறள் என்றிவற்றின் ஒருசாரனவுமே பதிப்பிக்கலாயின” என்னும் உதவியுரைத்தல் பகுதியால் அறிந்துகொள்ள முடிகிறது (அரங்கன், 1915: உதவியுரை).

9. பதிப்பாசிரியரின் திருத்தங்கள்

சுவடிகளை உள்ளது உள்ளவாறே பதிப்பிக்க வேண்டும். குறுந்தொகையின் முதற்பதிப்பாசிரியர் இடக்கர் சொல் எனக் கருதும் சொல்லை ஒன்பது இடங்களில் மாற்றியுள்ளதையும், அவ்வாறு மாற்றியதற்கு முன் உதாரணமாக சி.வை.தா. கலித்தொகையில் செய்த மாற்றங்களையும் குறிப்பிடுகிறார். இதனை, “இந்நூலுள் யான் செய்துள்ள மாறுபாடுகளும் சிலவுள. அவற்றையெல்லாம் கூறவேண்டிய கடமையையுடையேனாதலின், எஞ்சியவைகளும் பிறவும் என்னுந் தலைப்பின் கீழ்த் தெரிவிக்கின்றேன். அவற்றுள் இடக்கர்ச் சொல்லாகிய குஃறொடரன் மொழி இந்நூலகத்து, ஒன்பதிடத்து வந்திருந்தமையின், அவற்றை அறவொழித்துச் செய்யுளிற் குறைவு தோன்றாவாறு ஏற்றவற்றை என் சிற்றறிவிற்கு எட்டியவாறு சேர்த்து அதற்கேற்ப உரையெழுதியிருப்பதும் ஒன்று. இங்ஙனஞ் செய்தமைக்குக் காரணம் பழந்தமிழ் நூல்கள் பலவற்றைத் தமிழுலகிற்குத் தந்த தக்காராகிய ஸ்ரீமான் சி.வை.தாமோதரம்பிள்ளையவர்கள் கலித்தொகையகத்து மாற்றி வைத்துக் காட்டிப் போந்த காரணமேயாகும். தமிழபிமானிகளான எவரே, உயர்தரப் பரீட்சைகட்கும் தமிழ் கட்டாயப் பாடமாதலை விரும்புவாராகார்? அவற்றிற்கு அட்டவணை யொன்றமைத்து ஆண்டுக் காட்டியுமிருக்கின்றேன். முல்லை யென்பதன் இடைக்குறையான சொல்லையும் இல்லையெனச் செய்தல் என் கருத்தெனினும், அங்ஙனம் செய்வதாயின் அடிகளை முற்றும் மாற்ற வேண்டியதாய் நேர்ந்திடுவதை நோக்கி அக்கருத்தை அறவொழித்திட்டேன்” என்பதனால் அறிந்துகொள்ள முடிகிறது (அரங்கன், 1915: எஞ்சியவைகளும் பிறவும்).

| Copyright © Author(s)

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.23

10. உரைகாண முடியாப் பாடல்கள்

புத்துரை எழுதிப் பதிப்பித்த பதிப்பாசிரியர், ஐந்து பாடல்களுக்கு உரையெழுத முடியாத நிலையில் அந்தப் பாடல்களை உள்ளவாறே பதிப்பித்துள்ளார். இதனை, "முற்றும் உரைகாணமுடியாதனவான 364, 366, 367, 372, 376 எண்களுள்ள ஐந்துசெய்யுட்களையும் பிரதிகளிலுள்ளவாற்றை உணரற்காமாறு மாற்றாமற் பதிப்பித்திருக்கின்றேன்" என்றுரைக்கிறார் (அரங்கன், 1915) (படம் 3).

வரிசை எண்	செய்யுள் எண்
1	364
2	366
3	367
4	372
5	376

படம் 3: உரை காணமுடியாத ஐந்து செய்யுள்களின் எண்கள்

11. பாடினோர் எண்ணிக்கையிலான ஆய்வு

குறுந்தொகையின் பாடல்கள் 205 புலவர்களால் பாடப்பட்டுள்ளது. இதன் தொகையில் இப்பதிப்பு நிகழ்த்திய ஆய்வு முற்றுப் பெறாத ஆய்வு எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதனை, "இத்தொகைபாடிய கவிகள் இருநூற்றைவர் எனப் பாடினார்களின் தொகை வரையறை காணப்படுகின்றது. சென்னை அரசாங்கத்துப் புத்தகசாலையில் புத்தகங்களின் வரலாறுகளைக் குறிக்கும் அச்சுப் புத்தகத்தில், இரு நூற்றைந்து பெயர்களை அகராதி வரிசைப்படுத்திப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதனைத் துணையாகக் கொண்டு, மீண்டும் நூலிலிருந்து எடுத்தெழுதி வரிசைப்படுத்திப் பார்த்ததில் சிலமாறுதல்கள் தோன்றின. கடவுள் வாழ்த்துப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் தொகைபாடிய கவிகளுள் ஒருவராகக் கருதக்கூடியவராகாமையின், அவருள்பட இருநூற்றறுவராகும்படி ஒரு வாறு ஒழுங்குபடுத்திப் பாடினார் பெயரும் பிறவும் என்னுந் தலைப்பின் கீழ்க் குறித்திருக்கின்றேன். என்றாலும், நூலுள் பத்துப் பாடல்களில் பாடினார் பெயர் காணப்படாமையாலும், மற்றுஞ் சில ஐயங்கள் நிகழ்வதாலும் அப்பகுதியை இதுபொழுது ஒழுங்காக முடித்திட்டதாய்க் கூறமுடியவில்லை. இம்மிகுதியையும் பொறுக்க வேண்டுவல்" எனும்

பகுதியால் அறியமுடிகிறது (அரங்கன், 1915: பாடினார் பெயரும் பிறவும்).

12. மறுபதிப்பிற்கான எண்ணங்கள்

குறுந்தொகைப் பதிப்பில் பிழைகள் இருக்கலாம் என்பதைத் தெரிவிக்கும் சௌரிப் பெருமாள் அரங்கனார், அவற்றைத் தெரிவித்தால், அவற்றை வணக்கத்துடன் ஏற்றுக்கொண்டு மறுபதிப்பில் அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதாகவும் தெரிவிப்பதுடன், கூடுதலாகச் சுவடிகள் கிடைத்தால் அவற்றினை ஒப்புநோக்கி இப்பதிப்பை மறுபதிப்புச் செய்து வெளியிடும் எண்ணம் இருந்துள்ளதை அறியமுடிகிறது. இதனை, "இந்நூலின் பெருமையையும் எனது அறிவின் சிறுமையுங் கருதின், பலப்பலவிடங்களிலும் மிகப்பல வழுக்கள் செறிந்திருத்தல் இன்றி அமையாதனவாமாதலின், நல்லியல்புள்ளார்களாகிய நற்றமிழறிஞர்கள், இந்நூல், உரைமுதலியவற்றிற் காணப்படும் தவறுகளையும், விளங்காதனவாகக் குறித்துள்ளவைகளையும் மற்றும் உயரியவாய்க் காணப்படும் கருத்துக்களையும் அடியேனைப் பொருட்படுத்தி எடுத்துரைத்து உதவுமாறு அவர்களைப் பன்முறையும் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். அங்ஙனம் தெரிவிக்கப்படும் அறிஞர்களின் திருத்தங்களை வந்தனத்தோடு ஏற்றுக்கொண்டு, மறுபதிப்பில் அவற்றைத் தழுவி இன்னஇன்ன திருத்தங்கள் இவ்விவ் அறிஞர்களால் அறிவிக்கப்பட்டன வென்றும் மகிழ்ந்துசுட்டி அவர்கள் செய்தருளிய பேருதவியைப் பலர்க்கும் பயன்படச் செய்து எனது நன்றியறிவையும் மறவாமற் கூறுவேன். அன்றியும், இக்குறுந்தொகைப் பழம்பிரதியுடையார் தம் பிரதியைச் சிலவாரம் யான் வைத்துக்கொள்ளுமாறு உதவினும் அன்றித் தங்கள்பால் வந்து பார்த்துக்கொள்கவெனக் கட்டளையிடினும் அவர்கள் கருத்தின்படி பார்த்துக்கொண்டு கிடைக்கும் அரியவற்றைச் சேர்த்து மறுபதிப்பிற் பதிப்பிக்குங் கருத்துடையேனாதலின், அங்ஙனம் உதவ முன்வரும் தமிழபிமானம் மிகுந்த தக்கார்களுக்கு இப்பதிப்புப் பிரதியிலொன்றைத் தருவதோடு, மறுபதிப்பிலும் அவர்கள் பிரதிகொடுத்து உதவியமையைப் பாராட்ட எட்டுணையும் மறவேனாவேன்" என்கிறார் (அரங்கன், 1915). இதனால் குறுந்தொகையின் முதற்பதிப்பின் செம்மையாக்கம் குறித்த மதிப்பீட்டை அறியமுடிகிறது.

13. உரைகள் சுருக்கிப் பதிப்பிக்கப்பட்டுள்ளன

இப்பதிப்பிற்காக எழுதப்பட்ட உரைப்பகுதிகள் முழுமையும் அச்சாக்கப்படாமல் சில பகுதிகள் சுருக்கி அச்சிடப்பட்ட வரலாற்றை அறியமுடிகிறது. அச்சாக்கப் பணியில் ஏற்பட்ட காலதாமதம் இதற்கான காரணமாக அமைந்ததைப் பதிப்பாசிரியர் குறிப்பிடுகிறார். இதனை, "இந்நூல் முழுவதற்கும் விரிவாக எழுதிவைத்திருந்த என்னுரை முதலியவற்றை முதல் பதினெட்டு பாரம்

| Copyright © Author(s)

அச்சாதற்குப் பதினெட்டு மாதங்களின் மேலாகியதனாலும், அங்ஙனம் காலம் நீட்டித்தும் அச்சிடைச் சில ஒழுங்குக் குறைவுகள் ஏற்பட்டுவிட்டதாலும், மேலும் உளதாகும் காலவளவு எத்துணையாகுமோ? என்ற கவற்சியால், விரைவில் வெளிப்படுத்தலை விழைந்து 150வது செய்யுளிலிருந்து சுருக்கிப் பதிப்பிக்கும்படி நேர்ந்திட்டது" என்றுரைக்கிறார் (அரங்கன், 1915: உதவியுரை). இதனால், இக்குறுந்தொகைப் பதிப்பு, மேற்கோள் விளக்கம் உரைப்பகுதி எனும் இவற்றுள் ஆசிரியரின் கடின உழைப்பால் உருவான குறிப்புகள் முழுமையும் பதிப்பாக வெளிவராமல் போயிற்று என்பதைத் தெளிந்து அறியமுடிகிறது.

முடிவுரை

திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன் அவர்களால், குறுந்தொகையின் முதற்பதிப்பு 1915 இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மறுபதிப்பு, மீள்பதிப்பு, செம்பதிப்பு எனும் நிலையில் முதற்பதிப்பின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. முதற்பதிப்பைப் பதிப்பிக்கும் முயற்சிகளில் உள்ள கடினத்தைப் பதிப்பாசிரியர்களே நன்கறிவர்.

இப்பதிப்பு, குறுந்தொகையை மாணவர்களுக்கும் கொண்டு செல்லும் நோக்குடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பின் கடினத்தைக் குறிப்பிடும் சிறப்புப் பாயிரம் ஒருவரும் பதிப்பிக்காத இந்நூலை, பலராக ஒன்றிணைந்து இதன் பொருளைத் தேடினும் மயக்கமே எஞ்சிநிற்கிறது என்பதையும் குறிப்பிடுகிறது. இதனால் குறுந்தொகைப் பாடல்கள் கடினமாக உணரப்பட்ட பின்புலத்தை அறிந்துகொள்ள முடிகிறது. பண்டைத் தமிழர்களின் நாகரிகத்தை அறிந்துகொள்வதற்கான தரவாகக் குறுந்தொகை இருப்பது இக்காலத்தில் உணரப்பட்டுள்ளது. குறுந்தொகைக்கு நச்சினார்க்கினியர், பேராசிரியர் எழுதிய உரைகள் தேடப்பட்டும் கிடைக்காத நிலையில் புத்துரை எழுதப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன் அவர்கள் குறுந்தொகைப் பதிப்பை அடுத்து அகநானூற்றையும் பரிபாடலையும் பதிப்பிக்கும் முயற்சியில் இருந்துள்ளார் என்பதை இப்பதிப்பின் பின்புலத்தில் உணரமுடிகிறது (அரங்கன், 1915).

முதற்பதிப்பாக அமைந்த இந்தப் பதிப்பிற்குத் தொல்காப்பிய உரைமேற்கோள்கள் காரணமாக அமைந்தன என்ற செய்தி தொல்காப்பிய உரைகளின் சிறப்பையும் எடுத்துரைக்கின்றன. கிடைக்காத பாடல்களைத் தேடித் தொகுத்து பதிப்பித்துள்ள இப்பதிப்பாசிரியரின் முயற்சிக்குத் தமிழ் உலகம் என்றும் தலைவணங்கும். கலித்தொகைப் பதிப்பில் சி.வை.தாமோதரனார் அவர்களால் செய்யப்பட்ட திருத்தங்கள் இந்தப் பதிப்பாசிரியராலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இப்பதிப்புக் காலகட்டத்தில், 364, 366, 367, 372, 376 எனும் ஐந்து பாடல்கள்

உரைகாணமுடியாத நிலையில் இருந்துள்ள அறியமுடிகிறது. பாடினோர் பெயர், எண்ணிக்கையில் இந்தப் பதிப்பு தன்னாலான செம்மையாக்கத்தை அளித்திருப்பதையும் அவற்றுள் நிறைவுபெறாத மனநிலையில் இப்பதிப்பை முடித்துள்ளதையும் காணமுடிகிறது. அச்சுப் பதிப்புப் பணியில் அன்றிருந்த சிக்கலால், குறுந்தொகைப் பதிப்பும் குறுந்தொகைப் உரைப் பகுதிகளும் சுருங்கியதை அறியும் பொழுது தமிழின் மீது அன்புகொண்ட நெஞ்சங்கள் வேதனை அடையும்.

மேற்கோள் நூல்கள் (Works Cited)

[1]. சௌரிப்பெருமாள் அரங்கன், சௌ. எட்டுத்தொகையுள் இரண்டாவதாகிய குறுந்தொகை மூலமும் திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கன் இயற்றிய புத்துரையும். வேலூர்: வித்யாரத்நாகர அச்சுக்கூடம், 1915. அச்சு.

[2]. சுந்தரமதி, குளோறியா. டாக்டர் உ.வே.சா. சங்க இலக்கியப் பதிப்புகள். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1984. அச்சு.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work